திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் பணியாற்றக் கூடிய எல்லா அதிகாரிகளுக்கும் மலைப்படி வழங்கப்படுகின்றது. அதேபோன்று இந்த அமைப்பாளர்களுக்கும் மலைப்படியைச் சேர்த்துத்தர குறிப்பு ஏதாவது உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மலைப்பகுதியிலே இருக்கின்றவர்கள் தான் அந்தப் பணியிலே அமர்த்தப்படுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கென்று தனிச் சலுகைத் தேவையில்லை.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு மத்திய அரசாங்கம் கொடுக்கின்ற சம்பள விகிதம் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, இரண்டு விதமான சம்பள விகிதங்கள் வழங்கப்படுகின்றன. ஆகவே, தனிக் கேள்வி போடவும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பனைவெல்ல கூட்டுறவுச் சங்கங்கள்.

257—(*வினா எண். 9054)—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பனைவெல்ல கூட்டுறவுச் சங்கங்கள் இயங்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை இயங்க வைக்க திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இயங்காமல் உள்ள சங்கங்களை அவைகளின் அருகாமையிலுள்ள செயல்படும் சங்கங்களுடன் ஒருங்கிணைத்து செயல்பட வைக்க தக்க நடவடிக்கையினை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ஏடுத்து வருகிறது.

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் நல்லாறு அணைக்கட்டு

258—(*வினா எண். 440)—திரு. இரா. தாமரைக்கனி, திரு. பி. கந்தசாமி, திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தில் நல்லாறு என்னுமிடத்தில் அணைகட்டும் திட்டம் அரசு ஆய்வில் உள்ளதா

1987 ஏப்ரல் 2]

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டி முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் குறித்து பொதுப்பணித் துறையும் தமிழ்நாடு மின்வாரியமும் இணைந்து ஒரு கூட்டு அறிக்கை தயாரித்து வருகிறது. இவ்வறிக்கை அரசுக்கு கிடைத்தபின் இத்திட்டத்தை செயல்படுத்துவது குறித்து கேரள மாநில அரசின் ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தின் கீழ் நல்லாறு என்னுமிடத்தில் அணை கட்டுவதன் மூலம் எத்தனை ஏக்கர்கள் பாசன வசதி அடைகிறது? எவ்வளவு ரூபாய் மதிப்பீட்டில் தயாரிக்கப்படுகிறது? எப்போது ஆய்வு வேலை முடியும் என்று அறிய விரும்புவதோடு பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் மொத்தத்தில் எத்தனை ஏக்கர் பாசன வசதி அடைகிறது, விரிவுபடுத்துவதால் கூடுதலாக எவ்வளவு ஏக்கர் பாசன வசதி அடையும்?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினுடைய மதிப்பு சுமார் 81.50 கோடி ரூபாய் ஆகும். இந்தத் திட்டம் இப்போது ஆய்விலே இருந்துக் கொண்டிருக்கிறது. மின் வாரியமும் பொதுப்பணித் துறையும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வரவேண்டியிருப்பதால் இந்தத் திட்டத்தை இரண்டு பேரும் சேர்ந்து ஆய்வு செய்துகொண்டிருக்கிறார்கள். இப்போது மொத்தம் நான்கு இலட்சத்து இருபதாயிரம் ஏக்கர் பாசன வசதி பெற்றுக்கொண்டிருக்கிறது. இதன் மூலமாக இப்போது கிடைக்கின்ற அந்த பாசன வசதி உறுதி செய்யப்படும்.

சித்தேரி ஏரிக்கு மஞ்சினை ஓடையிலிருந்து புதிய கால்வாய்.

259—(* வினா எண். 3961)—திருமதி தா. இராசாம்பாள்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாச்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சித்தேரி ஏரிக்கு மஞ்சினை ஓடையிலிருந்து புதிய கால்வாய் வெட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.